பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

24 11 2022 **THURSDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

*தலைப்புச் செய்திகள்*

1. கல்வித்துறையின் வளர்ச்சிக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. தற்போதைய சூழ்நிலையில் சர்வதேச அளவில் சிறுதானியங்களின் பயன்பாடு முக்கியத்துவம் பெறுவதாக வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

3. டிஜிட்டல் ஊடகங்களை முறைபடுத்துவதற்கான சட்டம் விரைவில் கொண்டுவரப்படும் என்று மத்திய அமைச்சர் திரு. அனுராக் சிங் தாக்கூர் கூறியுள்ளார்.

4. நாட்டின் நிலக்கரி உற்பத்தி அதிகரித்துள்ளதாக அத்துறைக்கான அமைச்சம் தெரிவித்துள்ளது.

5. உலக இளையோர் குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் கீர்த்தி மற்றும் **Vanshaj** இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.

--- *இனி விரிவான செய்திகள்* ---

கல்வித்துறையின் வளர்ச்சிக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

நாடு முழுவதும் பல்கலைக்கழகங்கள் மற்றும் மருத்துவக்கல்லூரிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

இன்று குஜராத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், மகளிர் நலனுக்காக நிறைவேற்றப்பட்ட திட்டங்களை பட்டியலிட்டார்.

மகளிர் மற்றும் குழந்தைகளின் ஆரோக்கியத்தை கருத்தில்கொண்டே, ஊட்டச்சத்து இயக்கத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாகவும் பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<>>>>

மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் சுகாதாரம், கல்வி, ஊரக வளர்ச்சி, குடிநீர், துப்பரவு உள்ளிட்ட சேவைத் துறை மற்றும் வர்த்தகம் சார்ந்த பிரதிநிதிகளுடன் புதுதில்லியில் இன்று பட்ஜட்டுக்கு முந்தைய ஆலோசனையை மேற்கொண்டார். இது ஐந்தாவது ஆலோசனை கூட்டம் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தற்போது உலகளவில் எழுந்துள்ள பருவநிலை மாற்றம் மற்றும் கோவிட்-19 தாக்கம் ஆகியவற்றின் பின்னணியில் சிறுதானியங்களின் பயன்பாடு முக்கியத்துவம் பெறுவதாக வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர். எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். வரும் 2023-ஆம் ஆண்டு சர்வதேச சிறுதானியங்கள் ஆண்டாக ஐ நா அறிவித்துள்ளதை அடுத்து இன்று புதுதில்லியில் சிறுதானியங்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் நிகழ்ச்சியினை தொடங்கிவைத்து அவர் உரையாற்றினார்.

அப்போது பேசிய அவர், உணவு பாதுகாப்பு மற்றும் சர்வதேச உறவுகளை மேம்படுத்துவதற்கு சிறுதானியங்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்தாக உள்ளது என்று குறிப்பிட்டார்.

கோவிட்-19 காலகட்டத்தில் உலகளாவிய நோய் தொற்று எப்படி உணவு பாதுகாப்பினை பாதிக்கக்கூடும் என்பதை உணர்ந்தாக அவர் தெரிவித்தார்.

பருவநிலை மாற்றம், தானியங்களின் உற்பத்தியை வெகுவாக பாதிப்பதாகவும் அவர் கூறினார்.

இந்த பிரச்சனைகளை தீர்ப்பதற்கு சர்வதேச அளவிலான ஒத்துழைப்புகள் தேவைப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த விழாவில் பேசிய வேளாண்மை துறை அமைச்சர் திரு. நரேந்திர சிங் தோமர் வறட்சியான காலகட்டதிலும் சிறுதானியங்களை உற்பத்தி செய்யமுடியும் என்று கூறினார்.

சிறுதானிய உற்பத்தியை அதிகரித்து அதன் பயன்பாட்டை உயர்த்தும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

சிறுதானியங்கள் பயன்படுத்துவதன் மூலம் ரத்த சோகை நோய், கல்லீரல் தொடர்பான பிரச்சனைகள் மற்றும் ஆஸ்த்மாவை குறைக்கும் என்று அவர் தெரிவித்தார்.

நார்சத்து மிக்க உணவுகள் உண்பதன் மூலம், உடல்பருமன் மற்றும் நீரிழிவு நோயை குறைக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சிறுதானியங்கள் 131 நாடுகளில் விளைவிக்கப்படுவதாகவும் ஆசியா மற்றும் ஆப்பரிக்கா நாடுகளை சேர்ந்த மக்களுக்கு இது பாரம்பரிய உணவாக இருந்து வருவதாகவும் அவர் கூறினார்.

<<<<>>>>

ஹரியானா மாநிலத்தில் பிவானி - ஹன்சி இடையே நான்கு வழி தேசிய நெடுஞ்சாலை அமைப்பதற்கு அனுமதி வழக்கப்பட்டுள்ளதாக மத்திய தரைவழி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

இதற்காக ஆயிரத்து 300 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதன்மூலம், மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்து சீராக இருக்கும் என்று அவர் கூறினார்.

இந்த சாலை அமைவதன் மூலம் ஹரியானா மாநிலத்தில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மேம்படும் என்றும் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

டிஜிட்டல் ஊடகங்களை முறைப்படுத்துவதற்கான சட்டம் விரைவில் கொண்டுவரப்படும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அனுராக்சிங் தாக்கூர் கூறியுள்ளார்.

ஜெய்ப்பூரில் பத்திரிகை நிறுவனம் ஒன்றின் வெள்ளிவிழா கொண்டாட்டங்களில் பங்கேற்று பேசிய அவர், டிஜிட்டல் ஊடகங்களில் பணி புரியும் பத்திரிகையாளர்களுக்கு அங்கீகாரம் வழங்கப்படும் என்றார். தற்போது நடைமுறையில் உள்ள மாற்றங்களுக்கேற்ப நெறிமுறைகள் அறிமுகப்படுத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

மின்னணு மற்றும் டிஜிட்டல் முறையில் செய்திகள் பகிர்ந்து கொள்ளப்பட்டு வரும் நிலையில், நேரடியாக மக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்கும் அளவிற்கு ஊடகங்கள் வளர்ச்சி அடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

<<<<>>>>

நாட்டின் நிலக்கரி உற்பத்தி இந்த ஆண்டு அக்டோபர் மாதம் வரை 448 மில்லியன் டன் அளவிற்கு உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக நிலக்கரித் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது கடந்த ஆண்டை ஒப்பிடும் போது 18 சதவீதம் அதிகம் என்றும் கூறியுள்ளது.

இந்த மாத இறுதிக்குள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் நிலக்கரியில் 30 மில்லியன் டன் நிலக்கரி சேமித்து வைக்கப்படும் என்றும் இதனால் பற்றாக்குறை ஏற்படாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலக்கரி உற்பத்தி, அதன் தரம் மற்றும் பல இடங்களுக்கு அதை கொண்டு செல்லும் போக்குவரத்து வசதிகள் குறித்து உன்னிப்பாக கவனித்து வருவதாகவும் அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

இலக்குகளை இடைமறித்து தாக்கும் வல்லமை கொண்ட அக்னி-மூன்று ரக ஏவுகணை ஒடிஸாவில் இன்று வெற்றிகரமாக சோதித்து பார்க்கப்பட்டது. பாதுகாப்புப் படைகளின் கூட்டு நடவடிக்கையின் பேரில் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

லடாக்கில் மூன்று சுரங்க பாதைகள் அமைப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாக யூனியன் பிரதேசத்தின் செயலாளர் திரு. அஜித் குமார் சாகு தெரிவித்துள்ளார்.

பல்வேறு காலநிலைகளிலும் பயன்படுத்தும் விதத்தில் இந்த சுரங்க பாதைகள் அமைப்பதற்கான ஆய்வுகளை ரயில் இந்தியா தொழில்நுட்ப குழு நடத்தி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த சுரங்க பாதைகள் அமைவதன் மூலம், பயண நேரம் வெகுவாக குறையும் என்று அவர் குறிப்பிட்டார்.

<<<<>>>>

குடியரசுத் தலைவர் மாளிகையை பொதுமக்கள் பார்வையிடுவதற்கு டிசம்பர் முதல் வாரத்தில் 5 நாட்கள் அனுமதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. புதன், வியாழன், வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை பொதுமக்கள் பார்வையிடலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

குடியரசுத் தலைவர் மாளிகையில் உள்ள அருங்காட்சிய வளாகத்திற்கும் அவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்று குடியரசுத் தலைவர் மாளிகை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது. விருப்பம் உள்ளவர்கள் குடியரசு தலைவர் மாளிகை இணையதளம் வாயிலாக முன்பதிவு செய்துகொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

பாக்கிஸ்தான் ராணுவத்தின் புதிய தளபதியாக லெஃப்டினன்ட் ஜெனரல் ஆசிம் முனர் இன்று நியமிக்கப்பட்டுள்ளார். அந்நாட்டின் தற்போதைய ராணுவ தளபதி ஜெனரல் காமர் ஜாவித் பஜ்வா இம்மாதம் ஓய்வு பெறுவதை அடுத்து புதிய தளபதியை அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

இதுகுறித்து, செய்தியாளர்களிடம் பேசிய அந்நாட்டின் தகவல் தொடர்பு துறை அமைச்சர் மரியம் ஹவுரங்கசிப், பிரதமர் திரு. முகமது சபாஸ் சரீஃப் புதிய ராணுவ தளபதியை நியமித்ததாகவும், முப்படைகளின் தளபதியாக லெஃப்டினன்ட் ஜெனரல் ஷாஹித் சம்சத் மிர்ஸா நியமிக்கிப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

<<<<>>>>

பிரேசில் அதிபர், தேர்தலில் முறைகேடுகள் நடைபெற்றதாக கூறி அந்நாட்டு அதிபர் திரு. ஜேர் போல்ஸ்னோரா சார்பில் தாக்கல் செய்திருந்த மனுவினை தேர்தல் குறித்து விசாரிக்கும் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

அவர் தாக்கல் செய்துள்ள மனுவில் மின்னணு இயந்திரங்கள் பழுதாகி இருந்தாகவும், அதில் பதிவு செய்துள்ள வாக்குகளை நிராகரிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டு இருந்தார்.

இதுகுறித்து கருத்து தெரிவித்த அந்த நீதிமன்றம் இம்மாதிரியான மனுக்கள் ஜனநாயக முறைக்கு சவால் விடுப்பதாக உள்ளது என்று கூறியுள்ளது.

இது சமூக விரோதிகளுக்கும், குற்றவாளிகளுக்கும் சாதகமாக போய்விடும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

இந்த மனுவை தாக்கல் செய்த அதிபர் போல்ஸ்னோரா அணிக்கு 4 புள்ளி 27 மில்லியன் டாலர் அபராதம் விதிக்கப்பட்டது.

<<<<>>>>

கஞ்சிக்கோடு – வாளையாறு ரயில் வழித்தடத்தில் இரவு நேரங்களில் 30 கிலோமீட்டர் வேகத்திலேயே ரயில்கள் இயக்கப்பட வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம், தமிழக அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

யானைகள் பாதுகாப்பு தொடர்பான வழக்கினை விசாரித்த நீதிபதிகள் திரு சதீஷ்குமார், திரு பரத சக்ரவர்த்தி அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

நீதிமன்றத்தின் உத்தரவை செயல்படுத்தவில்லை என்றால், இந்த வழித்தடத்தில் இரவு நேர ரயில் சேவையை நிறுத்த உத்தரவிட நேரிடும் என்றும் நீதிபதிகள் எச்சரித்தனர்.

<<<<>>>>

வட தமிழகத்தில் அடுத்த 24 மணிநேரத்திற்குள் மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார். எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

<<<<>>>>

உலக இளையோர் குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் கீர்த்தி மற்றும் **Vanshaj** இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளனர். ஸ்பெயினில் நடைபெற்றுவரும் இப்போட்டியின், மகளிர் 81 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் கீர்த்தியும், ஆடவர் 63 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் **Vanshaj**-ம் வெற்றிபெற்றனர்.

---------

உலகக்கோப்பை கால்பந்து போட்டியில் ஸ்விட்சர்லாந்து 1-0 என்ற கோல் கணக்கில் கேமரூனை வென்றது. உருகுவே – தென்கொரியா இடையேயான ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.

---------

போர்ச்சுக்கல்லில் நடைபெற்றுவரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Suhana Saini – Yashaswini Ghorpade** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**<<<<END>>>>**